சைவ பரிபாலன சபை வெளியீடு.
ஆரம்பம்: விரோதி ளு (1889) ஆவணி மீ 28-ம் உ.

உ
சிவமயம்

செய்தித்தாளாகப் பதிவு பெற்றது

# இந்து சாதனம்

வெள்ளிக்கிழமை தோறும் வெளிவருவது

Hindu Organ

பிரதி விலை : சதம் 40

புத் - 92 ] யாழ்ப்பாணம்:- ரௌத்திரி ளு கார்த்திகை மீ 5 - 12 - 80 வெள்ளிக்கிழமை [ இல 24

UNIVERSITY OF SRI LANKA - JAFFNA CAMPUS
RECEIVED
1980-12--8
PERIODICALS DIVISION
LIBRARY

# சிவபூசை மாநாடு சிறப்பித்த நினைவு விழா

## குரவரின் குருபூசை நிகழ்ச்சியின் பெருங் குறிக்கோள்

ஐந்தாங்குரவர் ஆறுமுகநாவலர் அவர்களின் குருபூசை நாளாம் கார்த்திகைத்திங்கள் மக நட்சத்திரத்தன்று வழமைபோலச் சைவ பரிபாலன சபைச் சமயப்பிரசார அமைப்பாளர் பொருத்தமான நிகழ்ச்சிகளை அமைத்துச் சற்குருமணியின் நற்பணிகளை நினைவுகூர வைத்ததுமன்றி வருங்காலத்தில் நாவலர் நெறியிற் செயற்றிட்டத்தையும் வகுக்க வழி எடுத்தனர்.

காலையிற் சிவபூசை மாநாடு அப்பெருங் கிரியைக்குரிய அருட்பொலிவுடன் சபை நாவலர் ஆச்சிரமத்தில் விதிமுறை வழுவாது நிகழ்ந்தது. பண்டிதர் செ. சிவப்பிரகாசம் அவர்கள் இதற்குத் தலைமை தாங்கிச் சிறப்பித்தனர்.

நாவலர் சற்குருமணிமாலை ஒப்பெற்று நாவலர் புராணம் (அருணாசலக்கவிராயர் அவர்கள் இயற்றியது) படனஞ் செய்யப்பட்டது.

பண்டிதர் அவர்கள் நாவலர் பெருமானின் பாண்டித்தியத்தை ஆங்காங்கு சான்றுகள்காட்டி, தொகுத்துரைத்துச் சிவபூசை மாநாட்டுக்கமைய வேண்டிய சீரினையும் நாவலர் நெறியில் வைத்து விளக்கினர்.

நாகேசுர பூசையுடன் காலை நிகழ்ச்சிகள் மங்களகரமாக நிறைவுபெற்றன.

### மாலையில் மகத்தான விரிவுரைகள்

பருவ மழைவீழ்ச்சி பலமாக இருந்தபொழுதிலும் திட்டமிட்டபடி நாவலர்பற்றிய விரிவுரைகள் மாலை சபை மண்டபத்திலே திரு. ந. சிவப்பிரகாசம் அவர்கள் தலைமையில் நடைபெற்றன.

தொடக்கவுரையாகத் தலைவர் நாவலர் நினைவு சம்பிரதாயத் தன்மையில் நிகழவொண்ணாது; குரவரின் கோட்பாடுகளுக்கமையப் பொருத்தமானதாகப் பயனுள்ளவகையில் அமைய வேண்டுமென்று சுட்டிக்காட்டி, அப்பெரும் சைவசீலர் மாணாக்கர்களுக்கு அமைத்த நெறிக்கோவையாம் பாலபாடங்களில் உள்ளவற்றைச் சுருக்கித் தொகுத்து இக்காலக் கல்விக் கழகங்களில் வழங்கவைத்தல் கடன் என்றனர்.

### சித்தாந்த நூற் சாரத்தின் சாரம்

முப்பொருள் விளக்க நூல் ஆசிரியர் சித்தாந்த பண்டிதர் மு. இளையதம்பி அவர்கள் சைவ சாத்திரங்களை நாவலர் அவர்கள் எவ்வாறு கற்றறிந்து அவ்வனுபவத்தை மற்றையோர் பயனுறப் பனுவல்களாகத் தரும கைங்கரியஞ் செய்தனரென்பதை அவர்களின் வாழ்க்கையிலமைந்த பலவேறு அம்சங்களைப் படிப்படியாக ஆராய்ந்து எடுத்துக் காட்டிச் சிகரமாக நாவலர் நூல்களின் அளப்பரும் நயங்களைக் குறித்துப் பேசினர்.

சித்தாந்த பண்டிதரின் உரைச்சிறப்பாக நாவலர் இரண்டாஞ் சைவ வினாவிடையை எடுத்துக்கொண்டு, மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கனுள் ஒன்றாகிய மனவாசகங் கடந்தார் இயற்றிய உண்மை விளக்கம் என்னும் வெண்பா நூலில் ஒரு செய்யுளை ஆராய்ந்து நாவலரின் கருத்துகள் அதனையும் இந்த வெண்பாவின் விமர்சனமாக சித்தாந்த சாரத்தின் சாரமாக

(வளர்ச்சி 2ம் பக்கம்)

---

# யாழ் இந்துக்கல்லூரி வளாக வைரவ சுவாமி கோவில்

## பழையமாணக்கர் சங்கப் பணி

இந்துக்கல்லூரி மாணவர்கள் கோவில் கட்டட நிதிக்கு உதவிய ரூபா 12,000/- கொழும்பு பழைய மாணவர்சங்கம் உதவிய ரூபா 15,000/- கொழும்புத்துறை திருமதி என். நடராசா உவந்தளித்த ரூபா 10,000/- பழைய மாணவர்கள் உதவிய ரூபா 2,335/- ம் ஆக்கமும் ஊக்கமும் தருவதாக அமைந்துள்ளன.

மேலும் கொழும்பு பழைய மாணவர் சங்கம் ரூபா 10,000/- கடனாகவும் உதவியுள்ளார்கள்

ஞான வைரவர் ஆலய நிர்மாணம் ஆர்த்தமண்டபம் வரை முற்றுப் பெற்றுள்ளது. தொடர்ந்து சிலைகள் அமைப்புக்கும், கோபுர வர்ணப் பூச்சுக்கும் வேண்டிய ஆயத்தங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இரு மாடிக்கட்டிடம் ஒன்றுக்கு விஞ்ஞானக் கூடப் பட்டுவேலை நடந்து கொண்டிருப்பதையும் குறிப்பிடுகிறோம்.

இவ்வாண்டின் சிறப்பு மிகு நிகழ்ச்சியும், சாதனையுமாகிய விஞ்ஞானக் கட்டிடத் தொடக்கத்தைக் குறிப்பிடலாம்.

மாண்பு மிகு ஜனாதிபதி அவர்களிடமிருந்து பத்து இலட்சம் ரூபாய் கொழும்பு பழைய மாணவர் சங்கம் இக்கட்டிடத்திற்குப் பெற்றுத் தந்திருப்பதோடு அமையாது மேலுங் கொண்டும் 1981ல் நிதி உதவ ஜனாதிபதி வாக்களித்துள்ளமையும் பெரும் மகிழ்ச்சி தருவதாகும். கொழும்பு பழைய மாணவர் சங்கத்தின் அயராத முயற்சி பாராட்டுக்குரியது.

ஆண்டுதோறும் ஞானவைரவர் அபிடேக ஆராதனைகளைச் செய்து வரும் கலைவள்ளல் பசுபதி செட்டியாரின் வாரிசில் ஒருவராகிய க.சி.சோமசுந்தரம் அவர்கட்கு எமது நன்றி

யாழ் இந்துவின் சமய கலைப் பாரம்பரியங்களைக் காத்து வளர்த்துவரும், அதிபர் உப அதிபர், ஆசிரியர்கள், ஊழியர்கள் அனைவருக்கும் கல்லூரி வளர்ச்சியில் என்றும் கரிசனையுள்ள பழைய மாணவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றி உரித்தாகுக என்று 26-10-80 திகதி யாழ் இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற பழைய மாணவர் சங்கக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆண்டு அறிக்கையிற் குறிப்பிடப்பட்டிருந்தது.

சங்கத் தலைவர் திரு. விஸ்வநாதன் (யாழ் நகரமுதல்வர்) கூட்டத்திற்குத் தலைமை தாங்கினர்.

### புது நிருவாகிகள்

தலைவராக இந்துக்கல்லூரிப் பழைய அதிபர் திரு இ. சபாலிங்கம் அவர்களும் செயலாளராகத் திரு. மகேந்திரராசாவும் தெரிவு செய்யப் பட்டனர்.

---

ஆங்கில அறிவு அத்தியாவசிம் என்று அறிந்தவர்

# ஆறுமுகநாவலர் அவர்கள்

மொழி பயிலுதல் எவ்வழியிலும் அறிவு வளத்தைச் செறிய வைக்கும் என்ற உண்மையை முன்னுள்ள பெரியார்கள் நன்குணர்ந்து பன்மொழிப் பயிற்சி யுடையவர்களாய்ப் பன்னூல்களும் படைத்து மக்களுக்கு நன்னெறியைப் புகட்டிப் புகழ் பெற்றுத் தமக்கென வாழாப் பிறர்க்குரியாளராகத் திகழ்ந்தனர்.

வடமொழியும் தென்றமிழும் குடபால் மொழியாம் ஆங்கிலமும் நன்கு பயின்றவர்களே அக்காலத்து அறிஞர்கள் அனைவோரும் இதற்கு ஏற்ற எடுத்துக்காட்டாக விளங்கியவர் நல்லைநகர் ஆறுமுகநாவலர் அவர்கள். அன்னாரின் திறமையை உணர்ந்த வண்ணம் பீற்றர் பெர்சிவல் பாதிரியார் அவர்கள் ஆங்கில விவிலிய நூலை அழகான தமிழில் அமைக்கும் பணியில் நாவலர் அவர்களை ஈடுபடுத்திய ஒரு செயலே என்றும் நின்று நிலவும் பெருமை நாவலருக்கு அமைய வைத்ததெனலாம்.

இந்திய நாட்டிற்குச் சென்று தந்திறன் காட்டிய இலங்கை அறிஞர்களான திருவாளர்கள் சி. வை. தாமோதரம்பிள்ளை மல்லாகம், வை. கனகசபைப்பிள்ளை, மானிப்பாய், மாசிலாமணிப் பிள்ளை வண்ணை, த. செல்லப்பா பிள்ளை த. பொன்னம்பல பிள்ளை போன்றோரெல்லோரும் ஆங்கிலத்திற் கலைமாணிப்பட்டம் பெற்றவர்கள். ஆனால் அவர்கள் அமைத்த தமிழ் நூல்களே புகழைப் படைத்தன. இவ்வாறு வடமொழியிலும் தென்மொழியிலும் வல்லுநர்களான அந்தணர் திலகம் செந்திநாதஐயர் அவர்கள் முதலாகப் பல பண்டிதர்கள் இருமொழிப் புலமையாற் பெருமை பெற்றவர்கள். இந்த வகையிலே வந்த நாவலர் பெருமான் மும்மொழிச்செம்மையாளர் என்ற உண்மையை உற்று நோக்கும்பொழுது அறிவுச் செறிவுக்குப் பன்மொழிப் பயிற்சி நன்கமைய வேண்டும் என்பது புலனாகும்.

நாவலர் ஐயாவின் நாவன்மை செந்தமிழில் மட்டுமல்ல மேலைத்தேச மொழியான்றிலுமிருந்த தென்பதை அவர்கள் ஆங்கிலத்தில் வரைந்த கடிதங்களிலிருந்து நாம் காணலாம்.

கனம் யோன் உவால்ற்றனுக்குத் திரு. கந்தப்பிள்ளை ஆறுமுகம் 18-1-1856 திகதி இட்டு வரைந்த திருமுகம் ஈண்டு குறிப்பிடப்படுகின்றது.

(வளர்ச்சி 8ம் பக்கம்)

---

## மாத்தளை முத்து மாரிஅம்மன் மாசிமக மகோற்சவம்

நிகழும் ரௌத்திரி ஆண்டு 3-1-81 சனிக்கிழமை கொடியேற்றத்தோடு விக்குக் கொடி முத்துமாரி அம்மன் ஆலயத்தில் தொடர்ந்து 21 நாட்கள் உற்சவங்கள் நடைபெற உள்ளன. 18-1-81 புதனிரவு மக நட்சத்திரத்தில் பஞ்சரத உற்சவம் நிகழவிருக்கிறது. பஞ்சமுகவிநாயகரும், வள்ளிதெய்வானை சமேத ஆறுமுகசுவாமியும் அம்பிகைசமேத சோமாஸ்கந்த மூர்த்தியும், ஸ்ரீ முத்துமாரி அம்பாளும் ஸ்ரீ சண்டேஸ் வரியும் ஐந்து அதியற்புத இரதங்களில் ஆரோகணித்து எழுந்தருளி வந்து அடியவர்களைப் பக்தி வெள்ளத்தில் ஆழ்த்துவார்கள் 20-ம் திகதி தீர்த்தோற்சவமும் 21-ம் திகதி பூங்காவனமும் நடைபெறும் ஈழநாட்டின் மத்திய மலைப்பகுதியிற் கீர்த்தியும் மூர்த்திகரமும் பொலிந்து விளங்கும் மாத்தளை மாரியம்மன் தேவஸ்தானம் நாடெங்கிலுமுள்ள அடியவர்களால் ஆதரிக்கப்பட்டு, நன்கொடை வழங்கப்பெற்று வளர்ந்து வரும் திருக்கோயிலாகும்.

---

சிவாலயங்களிலே கார்த்திகைத் திங்கள் விழா

## திருக்கேதீச்சரத்தில் நகுலேஸ்வரத்திற் சிறப்பு

கார்த்திகைத் திங்கள் விரதம் கடைப்பிடிப்போர் பகலுண்ணாது கதிரவன் மறைந்தபின் உட்கொள்வர்.

சோமவார விரதம் சுக்கிரவார விரதம் போன்று கணிக்கப்படுவது.

திருக்கேதீச்சரத்திலே ஒவ்வொரு வாரமும் திங்களன்று திருவிழா இக்காட்டிலிருந்து பல சங்கங்கள், கல்லூரிகள், தாபனங்களால் முறையாக நிகழ்த்தப்படுவது. பாலாவித்தீர்த்

வளர்ச்சி 8ம் பக்கம்

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னுமமே
சூழ்க வையகமுந் துயர்தீர்கவே
திருச்சிற்றம்பலம்

இந்துசாதனம்

ரௌத்திரி ஞ கார்த்திகை மீ
5 - 12 - 80 வெள்ளி

## வள்ளல் காட்டிய வழியைமறந்துவிட்டோம்

ஐம்பதாண்டுகளுக்குமுன் இந்நாட்டில் ஒரு இடியேறு விழுந்தது: மக்களின் முடிசூடா மன்னனென வழிகாட்டி வந்த மாபெருந் தலைவன் மறைந்தான் வெள்ளம் போல் கண்ணீர் மல்க இலங்கை வாழ் மக்கள் அப்பெருந் தலைவனை இறுதி ஊர்வலத்தில் விடைகொடுத்து விட்டபொழுது அன்னாரின் முன்மாதிரியை இந்நாட்டில் யாரினி எடுத்துக் காட்டி வழிவகுக்கப் போகின்றார் என்று எண்ணியபடி கவலையுற்றனர்.

ஆண்டுகள் ஐம்பதும் ஆய்விட்டன. அந்த அரும் பெருந் தலைவனைப்போன்றோர் வழிகாட்டியை இன்னமும் பெற்றிலோம். நாவலர் பெருமான் நற்பேறெய்தியபின்னர் வள்ளல் இராமநாதன் அந்த நெறியில் நின்று சமயத்தையும் சமூகத்தையும் மொழியையும் ஒழுக்கத்தையும் நிலைநாட்டி வந்தனர். மக்கள் உயர்ந்த நெறியில் வாழ வழிவகுத்துக் கல்லூரிகளையும் கோயில்களையும் அமைத்ததுமன்றி அந்நியர் ஆட்சியினின்றும் விலகி முன்னோர் ஆட்சி முறையை நிறுவவும் முயன்று வந்தனர்.

இதுவே இராமநாத இலட்சியம் என்று எடுத்துக்காட்டும் நெறி, நாவலர் நன்னெறியைத்தொடர்ந்து இராமநாத இலட்சியமும் அமைந்தது. இவ்விரு வழிகளிலும் அடிப்படை சிவநெறி சார்ந்த தவவாழ்வேயாகும்.

கற்றாங்கு கற்று உற்ற வழி ஓம்பி நிற்றல் என்ற உயர்ந்த கொள்கையே அது; சைவவாழ்வு என்ன என்பதை விளக்கிக் காட்டக் கல்விக் கழகங்களும் கலைபயில் நல்ல நூல்களும் வெளியாயின, சத்பிரசங்கங்கள் நாடெங்கும் தகைமை பெற்றன. இது ஒரு பொற்காலம் ஆகப் பொலிந்தது,

இலட்சிய புருஷர்கள் இறைவனடி சார்ந்ததும் படிப்படியாக இந்நெறி குன்றி வந்து விட்டது. பெயரளவிலே சைவமும் தமிழும் இருக்கின்றனவேயன்றிச் சைவநீதியும் தண்டமிழின் தகைமையும் மறைந்துவிட்டன.

என்செய்வோம் ஆண்டுக்காண்டு உலக நெறிக்கு ஒப்புக்கொடுக்க எடுக்கப்படும் நினைவுவிழாக்களின் போதாவது இந்த இலட்சியங்களை எண்ணி உள்ளம் உந்தி இனிமேலாவது ஒரு சிறிதளவுக்கு இராமநாத இலட்சியமென்னும் நாவலர் நெறியின் தொடர்ச்சியை மீண்டும் கடைப்பிடிக்க முன்வர நாம் முனையக்கூடாதா?

கூடும், சைவம் என்ற நம்பிக்கை நமக்கிருப்பின் அதன் நெறியிலும் பற்றுடையவர்களாகவன்றோ இருத்தல் வேண்டும்.

இந்தநெறி சுலபமானது. நல்லதைச்செய்து அல்லதை விலக்குதல் அதுதான் சைவம். அன்பே சிவம் என்ற அரிய கருத்தினைப் புரிந்துகொண்டாற் கொல்லாமையிருக்க மாட்டாது உயிர் வர்க்கத்தை ஓம்பிக் காக்கும் எண்ணம் உதிக்கும் ஆனினம் வாழும், அவ்வழி அரன் பூசையும் ஓங்கும்! அந்தணரும் அறம் போதிப்பர். அரன் நாமமே சூழும் வையகம் துயர் நீங்கும்; ——

## பிறவிப் பேற்றுக்குப் பெருஞ் சான்று

*பிறவி எடுப்பதின் பேறு புகலின்*
*துறவி நெறிநின்று தூய — அறமும்*
*சிவதொண்டும் செய்து திகழ்ந்தநாவ லர்தம்*
*தவவாழ்வு சான்று தரும்.*

## சிவபூசை மாநாடு

1ம் பக்கத்து வளர்ச்சி

அமைந்தனவெனப் பொருத்தமாய்விளக்கிக்காட்டினர்.

*ஆறுறு தத்துவமே தாணவமே தன்றே தான்*
*மாறு வினையேது மற்றிவற்றின் — வேறாகா*
*நானேது நீயேது நாதனிடம் அஞ்செழுத்துத்*
*தானேது தேசிகனே சாற்று*

என்ற வெண்பாவில் எழுந்த எட்டு வினுக்களுக்கும் விடைகள் சித்தாந்த சாத்திரத்தை அமுதமாக்கி அளிக்கப்பட்ட ஒரு குளிகையாக அமைந்தன என்றார் பேச்சாளர்,

### உண்மைப் பொதுவுடைமைக்கு உதாரணம்

எல்லாருக்கும் எல்லாம் பொது என்ற உண்மை எப்பொழுதோ சைவ சித்தாந்த ஞானிகளால் எடுத்துக் காட்டப்பட்ட உண்மை என்று சைவப் புலவர் ம. நமசிவாயம் அவர்கள் தொட்டுக் காட்டித் திருமூலர் திருமந்திரத்தில்

"யாவர்க்குமாம் இறைவர்க்கொரு பச்சிலை......"

என்ற பொருட் பொலிவினைப் பீடிகையாக அமைத்து அன்பே அடிப்படையாகவுள்ள சைவ நெறியை அப்படியே வாழ்ந்து காட்டியவர் நாவலர் அவர்கள் என்றார்.

### செயற்பாட்டைச் சிந்திக்க வைக்கும் பிரேரணைகள்

சைவப் புலவர் ம. நமசிவாயம் அவர்கள் உரையாற்றியதோடமையாது அதனைத் தொடர்ந்து அங்கெடுத்தாளப்பட்ட கருத்துக்களையும் பிரேரணைகளாக முன் மொழிந்தனர். அவையாவன :

### நாவலர் தருமம்

1) நாவலர் தருமங்களிலே நவமாகவமைந்த வண்ணார்பண்ணை சைவப்பிரகாசவித்தியாசாலை நாவலரின் நன்னோக்கங்களுக்கமையநடைமுறையில் விளங்க வேண்டும்.

2) சைவ நெறியானது மக்கள் மத்தியில் உள்ளவாறு அமைவதை ஊக்குவிக்கத் தாபனங்கள் ஊர்கடோறும் அமைக்கப்பட்டுச் சைவ மக்கள் சைவ சாதனங்களைப் பயன்படுத்த வழி வகை செய்யவும் அவ்வழி அல்லல்கள் தோன்றின் அவற்றை நீக்கவும் ஒழுங்குகள் செய்யப்படுதல் வேண்டும்.

3) நாவலர் அவர்களும் சைவப் பெரியார் சிவபாதசுந்தரம்பிள்ளை அவர்களும் சைவ சமயப் பிரசாரத்துக்கும் கோட்பாட்டினை மக்கள் அறிந்து அவ்வாறு ஒழுகுவதற்கும் அதனைப் பரப்புவதற்கும் தக்க திருச்சபை "மிசன்" அத்தியாவசியம் என்று வற்புறுத்திய உன்னதமான கூற்று இக் காலத்தில் கூடுதலாக அவசியமாகையால் அப்படியான ஒரு சைவத் திருச்சபை (சைவ மிசன்') உருவாகுதலை ஆதரிக்க வேண்டும்.

இந்தப் பிரேரணைகளை ஆதரித்துப் பிரசார அமைப்பாளர் சித்தாந்த சிகாமணி மு. மயில்வாகனம் அவர்களும் சித்தாந்த வித்தகர் சே. க சண்முகம் பிள்ளை அவர்களும் குறிப்புரை கூறினர். இவை நிறைவேற்றப்பட்டன.

## பாராட்டுக்குரிய பணி

கதிர்காமத் திருத்தலத்திலே சைவ சமய அடியார்களுக்கென மட வசதிகளில்லையே என்று மக்கள் மனம் வருந்திவரும் இவ்வேளையிலே இந்துசமய விவகார அமைச்சர் அவர்களின் விடாமுயற்சியினால் இந்துக்களுக்குக் கதிர்காமத்தில் ஓர் மடம் அரசாங்கப் பொறுப்பில் அமைக்கப்பட ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும் என்ற நற்செய்தி ஓரளவுக்கு ஆறுதல் அளிக்கின்றது.

திட்டம் என்ற கீழ் மட்டத்தில் மட்டும் நின்றுவிடாது திட்டமிடப்பட்டபடி இந்த மடம் அடுத்த ஆண்டிலேயே அமைக்கப்படுவதற்கு இந்துசமய விவகார அமைச்சர் மேலும் ஆவன்றபடி தூண்டுதல் செய்வாரென நம்புகின்றோம்.

சைவசமயிகள் சார்பாகச் சங்கங்கள் அமைக்கும் மடங்களே பொருத்தமானவை. எனினும், ஒன்றும் இல்லாத இடத்தில் இந்தவிதமான பொது மடம் இந்துக்களுக்காக நிறுவப்படுவதை எல்லோரும் வரவேற்கவேவேண்டும்.

ஆனால் இந்தப் புதுவித மட அமைப்பிலே சைவ சமயிகளுக்குப் பிரத்தியேகமான வழிபாட்டுவசதிகளும் இடமும் அளிக்கப்படுதல் அத்தியாவசியம் என்பதை மட்டும் சுட்டிக்காட்டுகின்றோம்.

## ஆங்கில அறிவு

1-ம் பக்கத்து வளர்ச்சி

Dear Sir

In reply to your letter of this date, I am surprised to learn from you that the Pamphlet entitled (சைவ தூஷண பரிகாரம்) was put into your hands only a week since; and it is painful to my mind that you were not put in possession of the Pamphlet ere thus, while it has had its circulation a year ago; and a remark touching this Pamphlet is found in your report for 1855. It is true that the name of its Author was not in the title page, because the particular object of its author was purely to benefit the public but not to acquire a name. You say in your letter "several persons have asserted to me that the production is yours, whilst others have as confidently assigned it to other parties" I have to inform you that the letter assertion assigning it to other parties is as false as it is uncharitable; and on your deep and impartial enquiry you will be able to know that I am the author of the work in question and if you have anything to say on the subject contained in the Pamphlet I am always ready to accept and to have a friendly discussion

I am
Yours Faithfully,
Sgd; C. Arumugam

18th January
1856.

என்ன தர்க்கத் திறன் சொல்லாட்சி பொருட் பொலிவு! இக் கடிதத்தில் வல்லவன் வாயிற் சொல்வளம் எம் மொழியிலும் செம்மையாகும் என்பதே இதிலிருந்து தோற்றுகின்றது.

சைவ பரிபாலன சபையார் ஆங்கிலத்தில் இந்துசாதனத்தை (Hindu Organ) வெளியிடுவதும் இந்தக் கருத்தின் வழியிலேயே.

சைவ நெறியைச் சரிவர அந்நியர்களும் அறிதல் வேண்டுமென்ற பணியில் ஈடுபட்டவர்கள் விஞ்ஞானப் பட்டதாரி என்ற புனை பெயரில் ஆங்கில இந்துசாதனத்திலே பலப்பல அரிய கட்டுரைகள் அமைத்த பெரியார் அ. விசுவநாதன் அவர்கள். இக் கட்டுரைகள் யாவும் நூல் வடிவமாயிருக்கின்றன.

இவ்வாறே முதலியார் ச. சபாரத்தினம் அவர்கள் போன்றோர் பணியாற்றியிருக்கின்றனர்.

சைவப்பெரியார் சிவபாத சுந்தரம்பிள்ளையின் ஆங்கிலமொழியில் நூல்இலண்டனிலே அச்சேற்றப் பெற்றதென்றால் அதன் திறமையை மேலும் எடுத்துச் சொல்லவும் வேண்டுமோ?

நாவலர் நாள் நினைவாக இக் கருத்தை இந்துசாதன நேயர்களுக்குச் சமர்ப்பிக்கின்றோம். ——

கேதீச்சரத்தில்

## திருவாசக விழா

### சிவனடியார் திருக்கூட்டம் ஒழுங்குகள்

எதிர்வரும் 13- 12- 80 சனிக்கிழமை தொடக்கம்: 22. 12, 80 திங்கட்கிழமைவரையிலான திருவெம்பாவைப்பத்து நாட்களும் திருக்கேதீஸ்வரம் திருவாசக மடத்திலியங்கி வரும் ஈழத்துச் சிவனடியார் திருக்கூட்டம் புராண படனம், சொற்பொழிவுகள், சிவபூசை மாநாடு, திருவாசகவிழா மாகேசுரபூசை என்பனவற்றைச் சிறப்பாக நடாத்தவுள்ளது.

இந் நிகழ்ச்சிகளில், நம் நாட்டுச் சைவப் பேரறிஞர்கள் சமயச் சான்றோர்கள் சங்கீத வித்வன்னர்கள் கலந்து கொண்டு சமயப்பிரசங்கங்கள் திருமுறை இன்னிசைக்கச்சேரிகள் என்பன நடத்த உள்ளனர். இவற்றில் கலந்துகொள்ளும் சிவனடியார்களுக்கு ஏற்ற வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

## பிள்ளையார் பெருமான்

சிவபெருமான் முழுமுதற் கடவுள் என்ற சித்தாந்தந் தேர்ந்த சைவ சமயிகள் விநாயகர், வேல்முருகன் வீரபத்திரர் வைரவர் என்றமைத்துத் தங்கள் குல தெய்வங்களாகக் கும்பிட்டு வழிபட்டு வருகின்றனர். இந்தக் கொள்கை எதற்காக என்று எண்ணுவார்களுமுண்டு ஆனல் வெவ்வேறு தோற்றங்களில் விளங்குபவர் ஒருவரே என்ற உண்மை ஊன்றி ஆராயும் பொழுது புலப்படும்.

அரனின் அருள் மூர்த்தங்களாகவே ஆனைமுகப் பிள்ளையும் வேலைக் கையில் ஏந்தும் பிள்ளையும், திரிசூலத்தை கரத்திற் றாங்கும் பிள்ளையும் வில்லையுடைய பிள்ளையும் ஆகும் கணபதியும் கந்தனும் காரியுக் சடையோனும் திகழ்கின்றனர்.

இம்மூர்த்திங்களைப் பிள்ளைகள் என்றுநாம் அழைக்கின்றோமேயன்றி அவை அவ்வாருகா. அன்பின பெருக்கால் அணிபெற ஒரு பிள்ளைக்குப் பல பெயர்கள் புனைந்து அமைத்து அழைத்தல் போன்றது ஒன்ரும் உமையொரு பாகனின் மூர்த்தங்களை வேறு வேறு ஆகவிளித்து வழிபடல்.

மறையகின்றளன் நாமணிச் சோதியான். அன்பினற்கடைய விறகினின் றம விளங்கும் தீ போன்று ஒளி செய்வன இம் மூர்த்தங்கள்.

திருவுருவமாம் பெருவயிற்றுப் பிள்ளையாருக்குப் பலபல நாமங்களைப் புராண வரலாறுகளில் நாம் காண்கிறோம். ஒவ்வொரு பெயரும் அற்புக நிகழ்ச்சி ஒவ்வொன்றின் பொழுது அமைந்த பொருத்தம் உடைத்து.

அங்குசபாச மேந்தி, அம்பிகை தனயன் ஐங்கரன் ஆகுவாகனன் மூத்தோன் முக்கணன்' ஈசன் மைந்தன் ஒற்றை மருப்பினன், கணபதி, கங்கை பெற்ரோன், கயமுகன் என்று விநாயகரை அழைப்பர் அடியார். திருமூலநாயனுர் பிள்ளையாரின் பெருமையைச் சிறப்பித்துக் கூறுமிடத்து

'ஐந்துகரத்தனை
ஆனைமுகத்தனை
இந்தினிளம்பிறை
போலுமெயிற்றனை
நந்திமகன் றனை
ஞானக்கொழுந்தினைப்
புந்தியில்வைத்தடி
போற்றுகின்றேனே'

என வணங்குதல் காண்க

சிவபெருமானது திருவுருவமே சிந்துரவதனன் என்பதை எடுத்துக்காட்டும் தேவாரம் இது.

கைவேழ முகத்தானைப்
படைத்தார் போலும்
கயாசுரனை யவனுற்கொல்
வித்தார் போலும்
செய்வேள்வித் தக்கனை முன்
சிதைத்தார் போலும்
திசைமுகன்றன் சிரமொன்று
சிதைத்தார் போலும்
மெய்வேள்வி மூர்த்தி தலை
யறுத்தார் போலும்
வியன்விழி மழலையிடங்
கொண்டார் போலும்
ஐவேள்வி யாறங்க
மானுர் போலும்
அடியேனை யாளுடைய
அடிகள் தாமே.

திருவுருவங்கள் வேறு வண்ணங்களாக வருவதனை விளக்கும் திருவிளையாடல்களை விளங்கும் போது ஏகன் அநேகன் என்ற உண்மையை உணர்தல் இலகுவாகும். (வளரும்)

## கொல்லாமைபற்றித் திருமூலர் கூறுவதென்ன ?

—o—

கொலை செய்பவர்; செய்விப்பவர் ஆகும் இருதிறத்தவர்களும் ஒரு நிலையிலேயே பாதகர்களாகின்றனர்.

கொல்லிடு குத்தென்று கூறிய மாக்களை
வல்லடிக் காரர் வலிக்கயிற் றுற்கட்டிச்
செல்லிடு நில்லென்று தீவாய் நரகிடை
நில்லிடும் என்று நிறுத்துவர் தாமே.

புலால் புசித்தவர்களுக்கு மட்டுமன்று, ஊன் பெறுவதற்காக ஒருயிரைப் பிரித்தெடுக்கும்பொழுது 'அம்மா' என்றெழும் அவலக் குரலைக் கேட்டு அந்த இடத்தில் உயிரைக் காப்பாற்ற உன்னுது ஒன்று மறியார்போல விலகுகின்றவர்களுக்கும் பொய்ம்மாநிரயம் உண்டென்றுரைக்கின்றது பதி பசு பாச விளக்கம்.

புலால் பொல்லாததென்றும் புன்மையாளரே அதைப் புசிப்பார்களென்றும் புத்தி புகட்டும் திருமூலநாயனர் அதனல் விளையும் பயன் யாது என்றுரைப்பதை இங்கே காண்போம்:

பொல்லாப் புலாலை நுகரும் புலையரை
எல்லாரும் காண இயமன்தன் தூதுவர்
செல்லாகப் பற்றிய தீவாய் நரகத்தில்
மல்லாக்கத் தள்ளி மறித்து வைப்பாரே,

அவ்வளவோடமையாது

கொல்லும் நெறி நில்லாரைக் கொல்லும் தொழிலில் ஈடுபடச் செய்பவர்களும் ஊனுண்ணு நெறி நிற்பாரை ஊனுண்ண வைக்கின்றவர்களும் ஏழ் நரகுக்குரியராவர் என்கின்றது திருமந்திரம்.

### கள்ளுண்ணும் மாந்தர் கருத்தறியாரே

உள்ளுண்மை ஓரார் உணரார் பசுபாசம்
வள்ளன்மை நாதன் அருளினில் வாழ்வுறார்
தெள்ளுண்மை ஞானச் சிவயோகம் சேர்வுறார்
கள்ளுண்ணும் மாந்தர் கருத் தறியாரே.

என்றுரைத்த திருமூலர் மீண்டும் "மயங்கும் தியங்கும் 'கள்' வாய்மை அழிக்கும்" எனக் கள்ளுண்ணலைத் தொலைவிலே தள்ளி வைக்கின்றார்.

மூவாயிரம் ஆண்டுகளாக மூன்று முத்துக்கள் மூவாயிரம் தந்த முனி புங்கவரின் குருபூசைத் தினத்திலே சித்தாந்தக கருத்துக்களின் தெளிவு அறிய முடியாததென்கின்றவர்கள் பஞ்சமா பாதகங்களைப் பற்றி அந் நாயனர் ஆணித்தரமாகக் கூறியவற்றையாவது நினைந்து நெறி வழி வாழ்வார்களாக.

[ ஐப்பசி எட்டாம்நாள் நிகழ்ந்ததிக்குருபூசை ]

## நாவலர் பெருமான்
## ரௌத்திரி கார்த்திகை மகக் குருபூசை

[ சித்தாந்த பண்டிதர் டாக்டர் நா. கனகரத்தினம் ]

தமிழுடன் நற்சைவ நன்னெறி தழைத்துயர்ந் தோங்க
அமிழ்தினு மேலாமருஞ் சொற்பொழிவுடன் நயமார்தரு
சுமிர்தி உபநிஷத் வேதாகம திருமுறை நூல்களும்
அமிர்தென வாகதி அளித்திட் டோங்கிப் பெருதிமிர
திமரம் நீக்கிப் பரிதி யாக்கித் தமிழ்ச் சைவ
கிமிர்ந்தோங் குபுசெய் அமர! அமர! துதி·

## இந்து மாமன்றம்

29.11.1980 நடைபெற்ற ஆறுமுகநாவலர் குருபூசையை முன்னிட்டு யாழ். பெரியபுலம் இந்து மாமன்றத்தால் நடாத்தப்பெற்ற கட்டுரைப் போட்டியில் பரிசு பெறுவோர் விபரம்:

முதலாம் பரிசு செல்வன், பி, சிவஅன்பு
இரண்டாம் பரிசு செல்வி, பொ. புவனேஸ்வரி
மூன்றும் பரிசு செல்வன் க, கலைச்செல்வன்
செல்வன், மா-ராம்குமார்

## வள்ளல் இராமநாதன் குருபூசை

ஆங்கில முறைப்படி இராமநாதன் நினைவுநாள் 25-11-1980 ஆம். ஆனல் சைவப் பஞ்சாங்கத்தின்படி குருபூசை 10-12-1980. அன்று இராமநாதன் கல்லூரியில் குருபூசை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

## The Hindu Public

(continued from page 4)

who established the Sri Ramakrishna Mission and whose celebrations are presently being held in Sri Lanka with great acceptance by all communities and creeds and whose Head in Sri Lanka is His Holiness Swami Premanandaji, a distinguished and devoted son of Jaffna.

(To be continued)

## சிதம்பரத்திற் குருபூசை சீருடன் நிகழ்ந்தது

நாவலர் பெருமானின் 101ம் ஆம் குருபூசை வழிபாடு சேக்கிழார் கோயிலிலும் நாவலர் மேல் நிலைப் பள்ளியிலும் நடராசர் கோயிலிலும் 29-11-1980 அன்று முழுவதும் நன்கு நடைபெற்றது.

மாலையில் நடந்த பாராட்டுக் கூட்டத்திற்கு அண்ணாமலைப் பல்கலைக்கழகத் திருக்குறள் ஆராய்ச்சித்துறை விரிவுரையாளர் திரு. K. M. வேங்கடராமையா அவர்கள் தலைவராகப் பேருரை நிகழ்த்தினர்.

அண்ணாமலைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. அ. அருள்மொழி அவர்கள் சிறப்புரையாற்றினர்.

புலவர் தி. முருகேசனுர் அவர்கள் பள்ளிமாணுக்கர்களுக்குப் பரிசில் வழங்கினர்.

கலைநிகழ்ச்சிகள் மேல் நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் திரு. K. சுவாமிநாதன் அவர்களால் மிக அழகாக அமைக்கப்பட்டன; நற்பொறுப்பாளர் திரு. தி. க இராசேஸ்வரன் இவ்விழாவின் பெருஞ் சிறக்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்து நன்கு அமைத்துச் சிறப்பாக நிறைவேற்றினர்.

o o

## வரலாற்றில் வெவ்வேறு கருத்துக்கள்

சிதம்பரம் நாவலர் மேல்நிலைப் பள்ளியில் நிகழ்ந்த குருபூசை விழாவிலே நாவலர் சிதம்பர தருமத்தின் நற்பொறுப்பாளர் திரு. தி. க. இராஜேஸ்வரன் அவர்கள் தமது வரவேற்புரை நிகழ்த்தும் பொழுது நாவலர் பெருமான் பற்றிய வரலாற்றில் பாடபேதங்கள் சில உண்டென்றும் அவை ஆராயப்படுதல் நன்றென்றும் கூறினர்.

"நாவலர் பெருமான் எழுதி அச்சிட்ட நூல்களில் குருவணக்கம் காணப்படவில்லை. இதனல் நாவலர் பெருமான் பாடம் கேட்ட புலவர் பெருமக்களுள் ஒருவரிடமும் அவர் குருகுலவாச முறையில் நீண்ட காலம் தொடர்ந்து பாடம் கேட்கவில்லை என ஊகிக்கலாம், இதனை, அவர் யாழ்ப்பாணத்தில் உள்ள வைத்தீசுவரன் கோயிலுக்கு அடிக்கடி சென்று, அங்குள்ள தட்சணமூர்த்தி சன்னதியில் அமர்ந்து தியானம் செய்து, தட்சணமூர்த்தியின் திருவருளைப் பெற்று, பெரும் மேதையாகத் திகழ்ந்தார் என்னும் கூற்று வலியுறுத்தும்.

நாவலர்பெருமான் தாம் எழுதிய பெரியபுராண உரைநடை நூலில் கற்பக விநாயகருக்கு வணக்கம் செலுத்துகிறார். சிதம்பரம் மும்மணிக்கோவை, சேக்கிழார் புராணம், சிதம்பர புராணம் முதலிய நூல்களில் கற்பக விநாயகருக்கு வணக்கம் காணப்படுகிறது இதற்கு ஒரு சிலரின் விளக்கம் கற்பகவிநாயகர் சிதம்பரம் ஸ்தலவிநாயகர் என்பதாம். ஆனல் நடராசர் கோவில் மேலைக் கோபுரத்தின் புறத்தே கற்பக விநாயகர் கோவில் மேற்கு நோக்கி அமைந்திருப்பதால் மற்றும் சிலர் இக்கூற்றை மறுக்கின்றனர். ஆகையால் இது ஆராயத்தக்கது.

### சிவாலயங்களிலே

( 1-ம் பக்கத்து வளர்ச்சி )

தப் பரிசுத்தத்தை அனுபவித்து இவ்விரதத்தை அனுட்டானித்து கேதீஸ்வரரையும் கௌரியம்பாளையும் வழிபடும் ஆர்வம் அடியார்களுக்கு அளப்பரிதாகும்.

நகுலேஸ்வரத்தில் வண்ணையில், காரைநகரில் இவ்வாருகச் சிவனருள் திகழும் சிவாலயங்கள் ஏனையவற்றிற் கார்த்திகைத் திங்கள் விழா நன்கு நடைபெறுவது வழக்கம்.

இவ்வாண்டு ஐந்து திங்கள் விழாக்கள் நிகழ்கின்றன; கார்த்திகை 2ம், 9ம், 16ம், 23ம், 30ம் நாட்களில்

சிதம்பரத்திலே கார்த்திகையில் வரும் திருவெம்பாவைப் பூசைத் தொடக்கத்துடன் மகாவிழா ஆரம்பமாகி மார்கழி ஏழாம் நாள் நடேசர் ஆர்த்திரா தரிசனத்துடன் நிறைவுறும்

## இரு பெருங் குரவர்களின் நினைவு நாட்கள்

நாவலரும் வள்ளலும் ஏககாலத்துப் பேரறிஞர்களாகப் பரோபகாரிகளாக, சமயானுட்டானர்களாக, வழி காட்டுவோராக வாழ்ந்தவரலாறுபோல்வேறெக காலத்திலும் இந்நாட்டு மக்கள் காணமுடியாது;

பொற் காலம் என்றால் இதுபொருந்தும். வள்ளல் பொன். இராமநாதன் என்ற பெயரின் சுவை போல ஆறுமுக நாவலர் என்ற நாமமும் இனிமையுற் காந்த சத்திக்கிடமாகும்.

வீரர்களாம் இவ்விரு வித்தகர்களும் ஒருவருக்கொருவர் பெருமையளித்த வண்ணமாக வாழ்ந்து காட்டினர். யான் பெரியவன் என்று வீண் விபரீதங் கொண்டு வெகுளிப்படாது ஒரே நோக்குடன் உழைத்து ஒருவருக்கொருவர் உறுதுணையாகப் பணிபுரிந்தனர்.

இரு பெருங் குரவர்களையும் ஒரேதிங்களில் நினைவு நாள் விழாக்களில் எண்ணுவதும் ஒரு பொருத்தமே;

Hindu Organ

Friday, 5-12-80

### IN THE NAME OF THE GREAT NAVALAR

Commenting on the commendable proposal of the Minister of Hindu Affairs regarding the perpetuation of the revered name of Navalar the Great by means of a Memorial Hall in marble, we made the observations in the Inthusathanam that the better way would be to re-publish Navalar's epic works and make them available for schools, libraries and other establishments of literary import.

Reiterating our admiration for the Minister of Hindu Affairs in his zeal for the perpetuation of the memory of the memorable Scholar Navalar, at the Governmental level, we would go further and suggest that permanency of tribute to this eminent Teacher (குரவர்) could be best achieved by founding a Chair for Saiva Siddhantha in his revered name at the University of Jaffna. Paraphrasing this thought of ours we find in the sacred premises of the Parameswara College that was founded by an equally eminent contemporary of the Great Navalar — Sir Ponnampalam Ramanathan, the ideal seat for a Chair for Saiva Siddantha, now that these endowments proudly house the University of Jaffna—a culmination in the proper evolution of holy aspirations.

Certainly, the Hindus of this Island are indebted to the Authorities for having at the very outset established a Faculty for Hindu Civilisation. However, the exclusive study of Saiva Siddantha must be a necessary provision in the Highest Seat of Learning in Jaffna. In the Preamble to the Act Incorporating the Parameswara College, Sir Ramanathan had seen to it that the spiritual objects of higher education were sufficiently described.

The exposition of Saiva Siddantha philosophy has been earnestly undertaken in many Western Universities because of its distinguished place in the sphere of religious knowledge.

This year, the Guru Poojah of the Great Navalar falls tomorrow and on the eve of this significant occasion we commend this suggestion to the Authorities concerned and particularly to the vigilant Minister of Hindu Affairs.

# Sri Arumuga Navalar

## Saiva Prakasa Vidyasalai Trust

### CHIDAMPARAM and MADARAS

BUDGET 1980-81

### INTRODUCTION

*(Continued from our last issue)*

The maintenance of the Primary School account along with that of the Trust was discontinued from September 1979, and a separate account for the Primary School was opened in the State Bank of India to facilitate the encashment of salary grant drafts and maintenance grant drafts received from the Government without even a day's delay.

The Tamil Kalluri, as in the previous year, did not work during 1979-80 The Annamalai University intent upon opening B. Litt. Course in Tamil decided to close the Pulavar Course and stopped the entrance test for joining the said course The qualification for admission to the Tamil B. Litt. Course being a pass in the S. S. L. C. Course no student sought admission to the Tamil Kalluri. In these circumstances it is for consideration whether the Tamil Kalluri can be thrown open for coaching students studying for B. Litt. Course through Correspondence of the Madras Annamalai and Madurai Universities.

The Saiva Siddhantha Kalluri had six students in 1979 — 80, four of whom were girls. Only one candidate who appeared for and passed the Saiva Siddhantha test of the Annamalai University in April 1980 was from our Kalluri.

No printing work was done at the press in Madras. The big printing machine needs thorough overhauling and renovation of worn out parts The operation by hand power of the Treadle machine repaired in the previous year was found difficult and it has to be dismantled and reset up after rectifying the defect which made it difficult to work effortlessly. Only two hands are doing composing and binding work while forms are printed outside

The Guru Pooja of Saint Sekkilar was celebrated on 2 days. The Guru Pooja ceremony was performed in the morning on the first day In the evening one stanza from each of the ten paruvams in Sekkilar Pillai Thamil was read and explained after which the image of the Saint was taken in procession round Lord Natarajah temple. On the second day there was a musical performance at which devotional hymns, compositions on Sekkilar and Nayanmars and Navalar's keerthanams were sung.

As there has been a delay in preparing the Budget on account of its new set up consequent on the changes that took place in the year under review, I apologize for its belated presentation.

This being my last Budget to be presented to the Board of Control I am availing myself of this opportunity to thank one and all connected with the Trust and its Institutions for kindly co-operating with me in carrying out the work of the Trust and to express my gratitude to the Chairman and the other members of the Board for their kind guidance whenever I sought their advice in matters relating to the administration of the Trust.

—TRUSTEE

Chidambarem
26th Oct. 1980.

# These Journals Deserve Wider Support

## HEAVY BURDEN RESTS ON THE HINDU PUBLIC

*(Sri S. Sivasubramaniam, our veteran Hindu Leader, sent us his observations for publication as early as September. In view of the weight and worth of these significant suggestions it became necessary that the entire communication should appear in one single issue of the Hindu Organ. Hence the delay Ed.)*

The decades of unique services rendered by the Jaffna Saiva Paripalana Sabhai, the Hindu Organ and the Inthusathanam, the Jaffna Hindu College and its affiliated Institutions under the inspirations of Sri La Sri Arumuga Navalar Peruman and his contemporaries and his earlier predecessors and successors like Sri La Sri Yoga Swamigal, members of the Hindu priesthood and lay leaders like Sir Ramanathan and others in the task of Hindu or Saiva Renaissance form a veritable saga in the history of religious, cultural, educational, social, humanitarian, political and general welfare of Sri Lanka and of India and of the entire world community. As a result of such deep inspiration from such several sources and the teachings of the Sri Ramakrishna Mission, institutional and personal, further institutions were founded in Sri Lanka and India and in other parts of the world, including the Continents of Europe, America, and Africa — The entire life of the civilized world underwent a gradual, silent, yet effective transformation of the inhabitants of different countries leading to spiritual, religious, ethical, moral uplift and political and general advancement along with other factors and welfare considerably due to such cumulative efforts. The course of events also re-established the ancient Hindu ideal of one world, and universal welfare common to all religions but getting forgotten owing to the material prosperity and military ascendancy chiefly of certain western countries and their religious denominations at certain periods of history. A transformation has taken place in the minds of mankind all over the world and there is a progressive march towards a better state of affairs notwithstanding threats of war.

References have, inter alia, been made in your columns to the first Editor, Sriman T. Chellappapillai, retired Chief Justice of Travencore, whose scholarship, greatness, devotion to religion, high sense of duty and other eminent qualities and achievements await a biographical production. People speak nowadays of the Independance of the Judiciary. It is instructive to recall that the first Editor of the Hindu Organ, Sriman Chellappapillai when functioning as Chief Justice in the Indian State, resigned his office when there was attempted interference by the Executive to influence his judicial decisions. It is also heartening to recall that he was one of the chief representatives of the Tamil Public who were deputed to welcome His Holiness, Swami Vivekananda in Jaffna,

(continued in page 3)

வான்முகில் வழாது பெய்க
மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க
குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க
நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலக மெல்லாம்.

*Printed and published by the Proprietors, the Saiva Paripalana Sabhai, Jaffna at their Saiva Prakasa Press, 450, K. K. S. Road, Vannarponnai, Jaffna (Telephone: 356) on Friday, 5-12-1980*

Editor-in-Chief:
R. N. Sivapirakasam